

# உக்கிராணத்துவமும் ஊழியமும்


பாடம் 11 for
செப்டம்பர் 12, 2026


“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்
கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர்
ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள்
அவருடைய தரித்திரத்தினாலே
ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம்
தரித்திரரானாரே.” (2 கொரிந்தியர் 8:9)

உக்கிராணத்துவம் என்பது, ஒருவரது பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டவற்றை அவர் கையாளும் முறையாகும்.

கொரிந்தியர்களுக்கு பவுல் எழுதிய இரண்டாவது நிருபத்தின் பிண்ணனியில், “நிர்வாக பொறுப்பு” என்பது அப்போஸ்தலரின் ஒரு குறிப்பிட்ட பணியைக் குறிக்கிறது: மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டிருந்த எருசலேம் சபைக்கு உதவுவதற்காக, புறஜாதியார் சபைகள் பணம் திரட்ட வேண்டும்.

கொரிந்தியர்கள் ஏற்கனவே உதவி செய்வதாக உறுதியளித்திருந்தனர், அந்த உறுதிமொழியை உறுதி செயலில் காட்டுவதற்கான நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. மக்கெதோனியாவில் உள்ள சபைகள் ஏற்கனவே இதில் பங்கேற்க தொடங்கியிருந்தன. இதில் சம்மந்தப்பட்ட பணத்தின் அளவைவிட, தாங்கள் பெற்ற கிருபைக்கு பதிலளிக்கும் விதமாக விசுவாசிகள் எத்தகைய மன உறுதியுடனும் ஆர்வத்துடனும் இதில் பங்கேற்கிறார்கள் என்பதிலேயே பவுல் அதிக கவனம் செலுத்தினார்.



**உக்கிராணத்துவத்தின் தோற்றம்:**

- இயேசுவின் உதாரணம்
- பெறப்பட்ட கிருபைக்கு பதிலளித்தல்

**உக்கிராணத்துவத்தை எவ்வாறு கடைபிடிப்பது:**

- முறையான திட்டமிடல்
- சரியான மனப்பான்மை

**உக்கிராணத்துவத்தின் விளைவுகள்:**

- திருச்சபையின் ஒற்றுமை



# உக்கிராணத்துவத்தின் தோற்றம்

# இயேசுவின் உதாரணம்

“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.” (2 கொரிந்தியர் 8:9)

தேவனுடைய கிருபைக்கும் தாராள மனப்பான்மைக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன? (2 கொரி. 8:1-2)

மக்கெதோனியா சபைகளுக்கு தேவன் கிருபையை அருளினார், மேலும் அவர்கள் “தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்.” (2 கொரிந்தியர் 8:2). மேலும், இது அவர்களுக்கும் நமக்கும் இயேசுவின் கிருபையாக இருக்கிறது:



அவர் இவை அனைத்தையும் நம் மீதான அன்பினாலேயே செய்தார்! (யோவான் 15:13; எபேசியர் 5:2; கலாத்தியர் 2:20 ; 1 யோவான் 3:16).

இயேசுவின் கிருபைக்கு நாம் எவ்வாறு பதிலளிப்போம்? “இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.” (மத். 10:8).

அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், …தரித்திரரானாரே (2 கொரிந்தியர் 8:9)



அவர் பூமியில் வாழ்வதற்காக பரலோகத்தை விட்டு வந்தார்



அவர் பிரபஞ்சத்தை ஆள்வதை நிறுத்திவிட்டு, ஒரு தச்சராக மாறினார்



அவர் பாதுகாப்பான வசிப்பிடத்தை விட்டு, தன் சத்துருவின் இடத்தில் வாழும்படி வந்தார்



அவர் அரச கிரீடத்திற்கு பதிலாக முள்முடியை ஏற்றுக்கொண்டார்



# பெறப்பட்ட கிருபைக்கு பதிலளித்தல்

“மேலும் நாங்கள் நினைத்தபடிமாத்திரம் கொடாமல், தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்.” (2 கொரிந்தியர் 8:5)

## கிருபைக்கு மக்கெதோனியர்கள் அளித்த எதிர்வினையை கவனியுங்கள்:



- அவர்கள் இயேசுவின் கிருபையை பெற்றுக்கொண்டார்கள் (2 கொரி. 8:9)
- அவர்கள் தங்களை இயேசுவிற்கு ஒப்புக்கொடுத்தார்கள்(2 கொரி. 8:5)



- அவர்கள் மற்றவர்களுக்கு உதவும் பாக்கியத்திற்காக கெஞ்சி கேட்டனர் (2 கொரி. 8:4)
- அவர்கள் தங்கள் வறுமையிலும், தங்கள் சக்திக்கு மீறி கொடுத்தார்கள் (2 கொரி. 8:2-3)

## இது நமக்கு என்ன கற்றுக் கொடுக்கிறது?

- **தேவனுடைய கிருபைக்கான நன்றியுணர்வு(2 கொரி. 9:15)** → இயேசு நமக்காக எல்லாவற்றையும் கொடுத்தார். நம்மை முழுமையாக அவருக்கே அர்பணிக்க விரும்பும் விருப்பத்தில் தான் நமது நன்றியுணர்வு வெளிப்படுகிறது.
- **தேவனுடைய ஆசீர்வாதங்களை பகிர்ந்து கொள்வதற்கான வாஞ்சை(2 கொரி. 9:11(மு)** → நாம் முதலில் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்டதாலேயே மற்றவர்களுக்கு கொடுக்கிறோம்
- **உண்மையான அன்பு (2 கொரிந்தியர் 8:24)** → தாராள மனப்பான்மை என்பது நம் இதயங்களில் குடிகொண்டிருப்பதற்கான சான்றாகும்



# உக்கிராணத்துவத்தை எவ்வாறு கடைபிடிப்பது

# முறையான திட்டமிடல்

"அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." (2 கொரிந்தியர் 9:7)





எருசலேமில் உள்ள சபைக்கு உதவுவதற்காக, மக்கெதோனியா மற்றும் அகாயா (கொரிந்து நகரம் அமைந்திருந்த மாகாணம்) ஆகிய பகுதிகளில் உள்ள சபைகளிடமிருந்து ஒரு சிறப்பு காணிக்கையை சேகரிப்பதே பவுல் முன் வைத்த திட்டமாக இருந்தது (ரோ. 15:26).

ஓராண்டுக்கு முன்பு கொலோசெயில் அப்போஸ்தலர் அந்த திட்டத்தை முன்மொழிந்த போது, அது மிகுந்த ஆர்வத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது: இருப்பினும், அக்காலத்தில் குறிப்பிட்ட இலக்குகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை (2 கொரி. 9:1-2). என்றாலும், ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு குறிப்பிட்ட தொகையை நன்கொடையாக வழங்க தங்கள் இருதயத்தில் தீர்மானித்தனர் (2 கொரி. 9:7மு).

காணிக்கையை திட்டமிடும்போது, ஒவ்வொரு குடும்பமும் தங்கள் நிதிநிலைக்கு ஏற்ப தங்களை மதிப்பிட்டுக்கொண்டு, நடைமுறைக்கு சாத்தியமான இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும்.






பவுல் தனது திட்டத்தில் சேர்த்துள்ள மற்றொரு அம்சம் என்னவென்றால், அனைத்தையும் ஒரே நேரத்தில் ஒப்படைக்க காத்திருக்காமல், நிர்ணயிக்கப்பட்ட தொகையை அடையும் வரை ஒவ்வொரு வாரமும் ஒரு சிறு பகுதியை தனியாக எடுத்து வைக்க வேண்டும் என்பதாகும் (1 கொரி. 16:2). இவ்விதமாக பவுல் வந்து சேரும்போது, அந்த முழு தொகுப்பையும் மகிழ்ச்சியுடன் ஒன்றுதிரட்ட முடியும் (2 கொரி. 9:3-5).

# சரியான மனப்பான்மை

"மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்." (2 கொரிந்தியர் 8:3)

கொலோசெயரின் தாராள மனப்பான்மையை ஊக்குவிப்பதற்காக, பவுல் அவர்களுக்கு மக்கெதோனியாவின் உதாரணத்தை கொடுக்கிறார். அந்த சபைகளில், சகோதரர்கள் தங்கள் காணிக்கைகளை கொடுப்பதில் தகுந்ததும் முன்மாதிரியானதுமான மனப்பான்மையை காட்டியிருந்தனர், ஏனெனில் அவர்கள் கொடுத்தார்கள்...


| | |
|---|---|
| சந்தோஷத்தினாலே (2 கொரி. 8:2மு) | கொடுக்க முடிந்ததில் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள் |
| உதாரத்துவமாய் (2 கொரி. 8:2பி) | அவர்களின் வறுமை ஒரு தடையாக இருக்கவில்லை |
| மகிழ்ச்சியாய் (2 கொரி. 8:3) | அவர்கள் தாமாக முன்வந்து தன்னிச்சையாக செய்தார்கள் |
| சிறப்புரிமையாய் (2 கொரி. 8:4) | இந்த செயல், தேவன் மற்றும் திருச்சபையின் மீதான தங்கள் அன்பை வெளிப்படுத்த அவர்களுக்கு வாய்ப்பளித்தது |
| தற்பிரதிஷ்டை செயலாக (2 கொரி. 8:5) | தேவன் மீதான அவர்களது பக்தி, மற்றவர்கள் மீதான அவர்களது பக்திக்கு வழிவகுத்தது |




# உக்கிராணத்துவத்தின் விளைவுகள்

# திருச்சபையின் ஒற்றுமை

"இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்." (2 கொரிந்தியர் 9:12)



எருசலேமுக்கு கொண்டு செல்லப்பட்ட காணிக்கை வேறு சில நல்ல விளைவுகளையும் ஏற்படுத்தயது(2 கொரி. 9:12).




யூதர்களும் யூதரல்லாதவர்களும் உதவி மற்றும் நன்றியுணர்வு ஆகிய பிணைப்புகளால் ஒன்றிணைக்கப்பட்டிருந்தனர் (ரோ. 15:26-27). இவ்வகையில், அப்போஸ்தலரின் இறுதி இலக்கு எட்டப்பட்டது: சபையில் ஐக்கியம்.




மற்றொரு அம்சம் என்னவென்றால், அந்த காணிக்கை கையாளப்பட்ட விதத்தில் இன்று நமக்கான ஒரு சிறப்பான பாடம் உள்ளது: எல்லாவற்றையும் ஒழுங்கான முறையிலும், சரியான நடைமுறைகளை பின்பற்றியும் செய்ய வேண்டும்.

அந்த காணிக்கை சேகரிப்பு பணியை மேற்பார்வையிட பவுல் தீத்துவை நியமித்தார்(2 கொரி. 8:16-24). காணிக்கையை சேகரித்து எருசலேமுக்கு அனுப்புவதற்கு இதைவிட சரியான வேறு வழி எதுவும் இருக்கவில்லை.

“கடவுளின் பணி தசமபாகங்கள், காணிக்கைகள் மற்றும் நன்கொடைகள் மூலம் நிலைநிறுத்தப்பட வேண்டும். தம்முடைய பொறுப்பாளர்களிடம் அவர் ஒப்படைத்துள்ள வளங்களை இப்போது கர்த்தர் கோருகிறார். [...]கர்த்தராகிய இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களிடமிருந்து, அவர் தாமே செய்ததை விட அதிகமான எதையும் எதிர்பார்ப்பதில்லை. கடவுளின் பணிக்காகத் தங்களைத் தாங்களே தாழ்த்தி, தியாகம் செய்பவர்கள் அவருடைய முன்மாதிரியையே பின்பற்றுகிறார்கள். அவர் தம்முடைய அரச ஆடைகளையும் கிரீடத்தையும் களைந்துவிட்டு, உயர்ந்த அதிகார நிலையிலிருந்து இறங்கி வந்தார். அவர் ஏழையானார்; ஏனெனில், அவருடைய வறுமையின் மூலம் நாம் நித்திய செல்வங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்தார். கடவுளின் ராஜ்யத்தில் நுழைய விரும்புவோருக்கு இடையிலான தடைகள் அனைத்தையும் நீக்குவதற்காக, அவர் தம்முடைய செல்வத்தை மட்டுமல்ல, தம்முடைய உயிரையே கூடத் தியாகம் செய்தார்.[...] கர்த்தராகிய இயேசு நம்மைத் தம்மோடு இணைந்து பணியாற்றுபவர்களாக மாற அழைக்கிறார். நாம் கொண்டிருப்பவை அனைத்திற்கும் அவரே உரிமையாளர்; அவற்றின் மீது அவருக்கு முழு உரிமை உண்டு. அவருடைய பணியில் உதவ நாம் காட்டும் விருப்பத்தின் மூலம், அவர் மீதான நம் அன்பை இப்போது நாம் வெளிப்படுத்தலாம்.”

எலன் ஜி உவைட் (தி அப்வர்ட் லுக், ஏப்ரல் 9)